www.tamilarangam.net

# தமிழினம் துப்பாக்கி முனையில் ....?

- இலங்கையில் அவசர நிலை பிரகடனம்.
- தமிழ் இளைஞர்கள் ஆயிரக்கணக்கில் கைது.
- யாழ்ப்பாணத்தில் இராணுவம் அட்டகாசம்.
- 2 தமிழ் இளைஞர்கள் சுட்டுக் கொலை.

இலங்கையின் யாழ்ப்பாணப் பகுதியில் நடைபெற்று வரும் பயங்கர வாதத்தை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்று ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன அவசர நிலைப் பிரகடன உத்திரவு ஒன்றைப் பிறப்பித்துள்ளார். இன வெறியின் உச்சத்தில் இருக்கும் புத்தபிக்குகள் ஈழத்தமிழர்களின் கோரிக்கைகளுக்கு எதிராக உள்ளனர். இலங்கையில் திட்டமிட்டுத் தமிழ்த் தேசிய இனத்தின் உரிமைகளைப் பறிப்பதற்கு இதுவரை ஆட்சியில் இருந்த கட்சியும், இருக்கின்ற கட்சியும் பல்வேறு வழிகளில் செயல்பட்டு வருகின்றன. அந்தத் தொடர்ச்சியின் ஒரு பகுதியே இந்த அவசர நிலைப் பிரகடனம்.

அவசர நிலைப்பிரகடனத்திற்குப் பின்னர் யாழ்ப்பாணப் பகுதியின் பாதுகாப்புப் பொறுப்பை இராணுவத்தின் முப்படைத் தளபதி ரணதுங்காவிடம் ஒப்படைத்துள்ளனர்.

பாதுகாப்பு என்ற பெயரில் யாழ்ப்பாணப் பகுதியை திட்டமிட்டு ராணுவத்தின்கையில் ஒப்படைத்திருப்பது அங்குள்ள சாதாரண, எளிய பொது மக்களைப் பயமுறுத்தவும், பீதியுடன் அவர்களை விசாரணையின்றிச் சிறையில் அடைக்கவும், துப்பாக்கியால் சுட்டுக் கொல்லவுமே பயன்படுத்தப்படுகிறது. இன்றைய இலங்கை இராணுவத்தில் சிங்களவர்கள் மட்டுமே பணியாற்றுகின்றனர் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. இலங்கை அரசு பயங்கர வாதத்தை டிசம்பர் 31 க்குள் ஒடுக்க வேண்டி ஒரு புதிய சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறது. இச்சட்டம், விசாரணையின்றி கைது செய்யவும், விசாரணையின்றி கொல்லவும் சடலங்களை புதைக்கவும் வழிவகை செய்கிறது. யாழ்பாணப் பகுதியில் ஏற்கனவே வழக்குகளில் விடுதலை செய்யப்பட்ட இளைஞர்களை மீண்டும் கைது செய்துள்ளனர்.

நவாலியூரைச் சேர்ந்த இன்பம், வடலி அடைப்பைச் சேர்ந்த செல்வரத்தினம் ஆகிய இரு இளைஞர்களையும் விசாரணைக்கென அழைத்துச்சென்று சித்திரவதை செய்து, சுட்டுக் கொன்று பாதையோரத்திலேயே சடலத்தைப் போட்டுச் சென்றுள்ளனர். இது தமிழர்கள் மத்தியில் பயங்கர பீதியை ஏற்படுத்தியுள்ளது. 1971ல் ஜே.வி.பி (செகுவரா) இயக்கத்தை ஒழித்துக்கட்ட 15 ஆயிரம் இளைஞர்களை சுட்டுக் கொன்றது போல தமிழ் இளைஞர்களைச் சுட்டுக் கொல்ல திட்டமிட்டுள்ளனர். ஆயிக்கணக்கான இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் உயிரோடுதிரும்பி வருவார்கள் என்பதற்கு உறுதியில்லை.

இத்தகைய கொடுமையான அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டு தமிழர்களை ஒழித்துக் கட்டும் வேலையில் அரசாங்கம் இறங்கியுள்ளது. சிறுபான்மையினரான தமிழினம் துப்பாக்கி முனையில் ஒடுக்கப்படுவதினை எதிர்க்கும் அனைத்து முற்போக்குச் சக்திகளையும் பொது மக்களையும், மாணவத் தோழர்களையும், இதற்கு எதிராக குரல் கொடுக்க வேண்டுகிறோம். உலக நாடுகள் குறிப்பாக நமது நாடு தனது செல்வாக்கைப் பயன்படுத்தி இலங்கை அரசின் தமிழின விரோத நடவடிக்கையை விடுத்து அமைதியான முடிவுக்குக் கொண்டுவர வேண்டுகிறோம்.

**அனைத்துக் கட்சி மாணவர்கள், தமிழ்நாடு.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்